**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சீருடைகள் வழங்கும் திட்டம் – அரசு சிறப்புப் பள்ளிகள், அரசு தொழிற் பயிற்சி மையம் மற்றும் அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளி, தொழிற்பிரிவு மாணவ, மாணவிகளுக்கு 4 செட் இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் – 2016–2017ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.13,14,600/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1டி) எண்: 4** **நாள்: 30.01.2017**

**துன்முகி – தை, 17**

**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (டி) எண் 57, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1(1)) துறை, நாள் 18.12.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண் 2753/சிபதி/2016, நாள் 14.07.2016 மற்றும் 29.09.2016.

––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 23 அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு தொழிற்பயிற்சி மையம் மற்றும் பூவிருந்தவல்லி, அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற் பிரிவில் பயிலும் மாணவ / மாணவியருக்கு 4 செட் விலையில்லா சீருடைகள் தைத்து (தையற் கூலியுடன் சேர்த்து) வழங்க, 2015–2016ஆம் ஆண்டுக்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.13,96,000 நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2016–2017ஆம் நிதியாண்டிற்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1233 மாணவ / மாணவியர்களுக்கு தலா ரூ.250/– விலையில் 4 இணை சீருடைகளுக்கு ரூ.12,33,000/– மற்றும் அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற்பயிற்சி பிரிவில் 68 மாணவ / மாணவியர்களுக்கு தலா ரூ.300/– விலையில் 4 இணை சீருடை வழங்கிட ரூ.81,600/– ஆக மொத்தம் 1301 மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் மற்றும் தையற்கூலியுடன் சேர்த்து ரூ.13,14,600/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து பதினான்காயிரத்து அறுநூறு மட்டும்) வழங்கிட அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு தொழிற்பயிற்சி மையம் மற்றும் பூவிருந்தவல்லி, அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, தொழிற் பிரிவில் பயிலும் மாணவ / மாணவியருக்கு 4 இணை விலையில்லா சீருடைகள் தைத்து (தையற் கூலியுடன் சேர்த்து) வழங்க, 2016–2017ஆம் ஆண்டுக்கு திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கென ரூ.13,14,600/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து பதினான்காயிரத்து அறுநூறு மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 அரசு சிறப்புப் பள்ளி மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 1233 | 1233 x ரூ.250 x 4 = | ரூ.12,33,000/– |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லியில் தொழிற் பயிற்சி பிரிவு மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 68 | 68 x ரூ.300 x 4 = | ரூ.81,600/– |
| | **மொத்தம்** | | **ரூ.13,14,600/–** |

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத்திறனாளிகள் நலன் – I-திட்டத்தில் சேராதது – AA-பார்வையற்றோர் பள்ளி – 46–உடைகள் கூடாரச் செலவுகள், பண்டக சாலைப் பொருள்கள்” (து.தொ.கு.2235–02–101–AA-4601)**

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆணையர் அவர்கள் பெற்று வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாரா எண் 54692/நிதி(சந)/2016, நாள் 20.01.2017–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
சமூக நல இயக்குநர், சென்னை–5.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
கைத்தறி, கைவினைப்பொருட்கள் மற்றும் கதர் துறை இயக்குநர், சென்னை–108.
நிர்வாக இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், சென்னை–6.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூகநலம்) அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
நிதி (ச.ந.) துறை, சென்னை–9.
நிதி (கல்வி) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்